# சமயங்கள், இலக்கியங்கள்: கோட்பாட்டு உருவாக்கங்கள்



பதிப்பாசிரியர்கள்

பி.திவ்யா, உ.பாத்திமா, நா.காயத்ரி

Scanned with CamScanner

# தமிழ் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்களின் மொரீயஸ் புலப்பெயர்வு:18331893

ஜெ. சண்முகராஜா
உதவிப்பேராசிரியர்,
வரலாற்றுப் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-21

19ம் நூற்றாண்டில் பிரிட்டிஷ்-இந்திய அரசு மேற்க்கொண்ட காலனிய மற்றம் ஏகாதிபத்திய நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரத்தை இழந்த ஏராளமான இந்தியர்கள் ஒப்பந்தக் கூலி தொழிலாளர்களாக அந்நிய தேசங்களுக்கு புலம் பெயர்ந்தனர். இந்த ஆய்வுகட்டுரை குறிப்பாக மொரிசீயஸ் கரும்பு தோட்டங்களுக்கு சென்னை மாகாணத்திலிருந்து கூலி தொழிலாளர்களாக சென்றோர் குறித்த ஆய்வைக் கருபொருளாகக் கொண்டுள்ளது. கட்டுரை மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியில் மொரிசீயஸ் தீவுகளின் வரலாற்றையும், இரண்டாம் பகுதியில் கூலி தொழிலாளர்கள் புலம் பெயர்வதற்கான காரணிகள் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை பல்வெறு கட்டங்களாக நடைபெற்ற புலம் பெயர்வும் ஆராயப்பட்டுள்ளது. கடைசி பகுதியில் கூலி தொழிலாளர்கள் தங்கள் பணியிடங்களில் சந்திக்க நேர்ந்த கடினமான கொடுமைகள் குறித்தும் விவரிக்கபட்டுள்ளன.

**காலனிய இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதார சீரழிவு: காரணிகள்**

பிரிட்டிஷ் காலனிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் விளைவாக இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட எதிர்மறைத் தாக்கம் இந்திய விவசாயத்துறையையும் அதை சார்ந்த கைத்தறித் தொழில்களையும் மிகவும் பாதித்தது. இதுகாறும் யாரையும் சாரமல் தமக்கென தனித்த பொருளாதார வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்த நெசவாளர்கள் தினக்கூலி தொழிலாளர்களாக மாற்றபட்டனர். பிரிட்டிஷ்-இந்திய அரசால் விதிக்கப்பட்ட கடுமையான செலுத்தமுடியாத புதிய வரிவிதிப்பினால்



Scanned with CamScanner